## சீனாவின் இராணுவ உதவிகள் தொடர்கிறது

[கொழும்பு]
இலங்கைப் படையினருக்கான இராணுவ உதவிகள் குறித்து சீனாவுக்கும் இலங்கைக்குமிடையில் தொடர்ந்தும் பேச்சுக்கள் இராஜதந்திரிகள் மட்டத்தில் நடைபெற்று (4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 34 வைகாசி 5 துல்ஹஜ் 4 இதழ்: 98
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 19-5-1991

## கண்ணிவெடியில் சிக்கி 4 படையினர் பலி

[சென்னை]
மட்டக்களப்பில் நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலக் கண்ணிவெடியில் சிக்கிய 4 படையினர் ஸ்தலத்திலேயே (4-ம் பக்கம் பார்க்க)

## 12 தமிழர் சுட்டுக் கொலை

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் படையினர் மேற்கொண்ட அடாவடித்தனத்தில் 12 தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.
மட்டக்களப்பு காரை போட்டமடுவை சுற்றிவளைத்த படையினர் அங்கு கைது செய்த 7 தமிழரை சுட்டுக் கொன்றதுடன் இருவரைக்கடும் (4-ம் பக்கம் பார்க்க)

★ இனப்பிரச்னை தொடர்பான

# இலங்கை அரசின் முக்கிய முடிவு ஜூன் நடுவில் வெளியாகும்

[கொழும்பு]
இலங்கை இனப்பிரச்சனை தீர்வு குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்பதுபற்றி அடுத்த மாத நடுப்பகுதியில் தெரியவருமென எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் ஒருகட்டமாக சர்வ கட்சி மாநாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகளும் இனப்பிரச்சனைக்கு தீர்வாக முன் வைத்த யோசனைகளை ஆராய்ந்து பொதுவான திட்டமொன்றைத் தயாரிப்பதில் சர்வகட்சி மாநாட்டின் சட்டவரைவுக் குழு ஈடுபட்டு வருகிறது.
எவ்வளவு விரைவில் இதனை சமர்ப்பிக்க முடியுமோ அவ்வ [4-ம் பக்கம் பார்க்க]

## அரசு தரப்பு யோசனை புலிகளுக்கு அனுப்பப்படும்

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்சனை தீர்வு குறித்து அரசின் யோசனைகள்பற்றி விரைவில் விடுதலைப் புலிகளுக்கு அரசு தரப்பினர் தெரிவிக்கலாமென எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.
இதுகுறித்து அரசின் முடிவு ஜூன் மாத இறுதிக்குள் தயாரிக்கப்படின் அது புலிகளுக்கு தெரிவிக்கப்படுமென நம்பப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இதுகுறித்து அரசு தரப்பினர் ஜூலைமாத முற்பகுதியில் அல்லது நடுப்பகுதியில் புலிகள் தரப்பு பதிலை நேரடியாகவோ அல்லது வேறு விதத்திலோ அறிய முயல்வார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு கட்சிகள் கிழக்கே விஜயம்

(மட்டுநகர்)
பதின்மூன்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களுக்கு விஜயம் செய்தனர்.
இக்குழுவினர் மூன்றாகப் பிரிந்து மேற்படி 3 மாவட்டங்களுக்கும் சென்றுள்ளனர்.
ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரிலேயே இவர்கள் அப்பகுதிக்குச் சென்றதாகவும் கூறப்படுகிறது. (ரி-ஜி)

## கொள்ளை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்புப் பகுதியில் ரோந்து செல்லும் ராணுவத்தினரின் உதவியுடன் ரெலோவினர் தமிழர்களின் வீடுகளுள் புகுந்து நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர்.
இக்கொள்ளைச் சம்பவத்துக்கு ரெலோகுழுவினர் குறிப்பிட்ட ராணுவத்தினரையே பயன்படுத்துவதாகவும் உயர் ராணுவ அதிகாரிகளுக்குத் தெரியாதபடி மிகவும் தந்திரமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## 20 பாடசாலைகளில் இராணுவ முகாம்!

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் மத ஸ்தாபனங்களின் கட்டிடங்களுட்பட பல கட்டிடத் தொகுதிகளைப் பலவந்தமாகப் பறித்து இராணுவ முகாம்களாகவும், காவலரண்களாகவும் மாற்றியமைத்து வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.
20 பாடசாலைக் கட்டிடங்கள் அனாதை விடுதிகள், இந்து இளைஞர் மன்றக் கட்டிடங்கள், தொழிற் பயிற்சி நிலையங்கள், மட்டுநகர் ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான கட் [4ம் பக்கம் பார்க்க]

## 23ம் திகதி மீண்டும் க. பொ. த. பரீட்சை

[கொழும்பு]
வடக்கு-கிழக்கில் ஒத்திவைக்கப்பட்ட க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் (1990) மிகுதிப் பாடப் பரீட்சைகள் 23-ம் திகதி வியாழக்கிழமை தொடங்கும் அடுத்த மாதம் 5-ம் திகதி வரை நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் திரு ஆர்தர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.
இம்மாதம் 6-ஆம் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 23-ஆம் திகதி நடைபெறும். இம்மாதம் 26, 27, 28-ஆம் திகதிகளும், அடுத்த மாதம் 2ம் (4ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ், சிங்கிற்கு கொலைப் பயமுறுத்தல்

[புதுடில்லி]
இந்திய முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங், இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ்காந்தி உட்பட பல கட்சித் தலைவர்களுக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக் (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழத்திற்கு பாட்டாளிகள் கட்சி ஆதரவு

(சென்னை)
இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு 'தனித் தமிழீழம்' கிடைப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி முற்றுமுழுதாக ஆதரிப்பதாக அதன் தலைவர் திரு. வி. ராமதாஸ் பி. பி. ஸி. க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் மோத மறுத்த லெப்.கேணலுக்கு 6 மாதசிறை

[கொழும்பு]
வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் ஈடுபட மறுத்த இராணுவ உயரதிகாரி ஒருவருக்கு ஆறுமாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
லெப்டினன் கேணல் தரத்திலுள்ள அதிகாரிமீது அண்மையில் 'பல்லேகல' இராணுவ (4-ம் பக்கம் பார்க்க)

## 'ஆதரவுக் கரங்கள் எல்லாம் ஆயுதம் ஏந்துங்கள்'

[யாழ்ப்பாணம்]
''எம்மக்களின் பங்களிப்புடன் விடுதலைப் புலிகளின் உயிராலும், இரத்தத்தாலும் இந்த மண்ணில் ஓர் புனித வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழீழ விடுதலைப்போராட்டம் வெற்றியின் திசைநோக்கி சென்றுகொண்டிருக்கிறது.
இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் (4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தரன் படப் பிடிப்பாளர்

கலர்-கறுப்பு வெள்ளைப் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் வேலை, விளம்பர போட், புளொக் டிசைன் மற்றும் ஓவிய வேலைகள். தரன் படப் பிடிப்பாளர், 87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 4673)

### தேவை

பூந்தோட்ட வேலையில் நல்ல அனுபவமுள்ள ஒரு நடுத்தர வயதுடைய, யாழ். நகரில் வசிப்பவர் உடனடியாகத் தேவை. தகுதி உடையவர், பெருமாள்கோயில் தேவஸ்தானத்தில் நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாகச் சமுகம் கொடுக்கவும். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். (சி4745)

## அகதி மரணம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மடு அகதி முகாமிலிருந்து கடும் நோய்க்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அகதி ஒருவர் மரணமானார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த முத்துபண்டா [45வயது] என்பவரே மரணமானவராவார். (56)

## 100 கிலோ சீனி உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் நாள் ஒன்றுக்கு 100 கிலோ சீனியை உற்பத்தி செய்கிறது.

நாளடைவில் மேலும் பல மடங்கு கிலோ சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (152)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் இவ்வாண்டுப் பன்முக வரவு-செலவுத் திட்டத்தின் கீழ், வனபரிபாலனத் திணைக்களத்திற்கு 4 லட்சத்து 40 ஆயிரத்து 500 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மணற்காட்டில் 50 ஏக்கரில் காடு வளர்ப்புக்கும், சமூகக் காடு வளர்ப்புக்கும் இந்நிதி பயன்படுத்தப்பட உள்ளது. (153)

## யாழ். நீராவியடி விநாயக அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீராவியடி ஜெயவீர கத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும்.

உற்சவ நாட்களில் திருமுறை இலக்கியம், தென்னாசியாவில் விநாயக வழிபாட்டின் தொன்மை, அச்சுவேலி செய்த அதிதிரா, சங்கத்தமிழ் மூன்றுந்தா, விநாயக மகத்துவம், சித்திதரும் கணபதி சமய வாழ்வுப் தத்துவமும், வெவ்வினை வேரறுக்க வல்லான் திருமந்திரத்தின் மகிமை ஆகிய பொருட்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் மு. நடராஜாவின், செ. கிருஷ்ணராசா, சி. சிவலிங்கராசா, க. நாகேஸ்வரன், கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், நா. ஞானகுமரன், யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்களான திரு. இ. சிவகுமாரன், திரு. சிவ. மகாலிங்கம், ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் இந்தச் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர். (158)

## உதைபந்தாட்டம்: சென்.றேக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுக்கழகங்களிடையே தற்போது நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் முதல் ஆட்டத்தில் சென். றேக்ஸ் கழகம், கிறீன்பீல்ட் கழகத்தை 5 – 1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. கே. பதுகுலசிங் மத்தியஸ்தம் வகித்தார்.

குருநகர் பாடும் மீன் கழக மைதானத்தில், யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டுவரும் இந்த நொக்கவுட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும் நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகமும் கலந்துகொள்ளும். (வி)

## விளையாட்டுத்துறை பயிற்சி முகாம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளின் விளையாட்டுத்துறை ஆசிரியர்களாக பணியாற்றும் ஆசிரியர், ஆசிரியைகளுக்கான இருநாள் விளையாட்டுத்துறை பயிற்சி முகாம் நாளை 20ம், 21ம் திகதிகளில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளை 20ம் திகதி திங்கட்கிழமையன்று பெண்களுக்கான வலைப்பந்து, எறிபந்து பயிற்சிகளும், 21ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று ஆண்களுக்கான உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய பயிற்சிகளும் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

## பொங்கல் விழா

(பருத்தித்துறை)

புலோலி மந்திகை கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா இம்மாதம் 28ம் திகதி நடைபெறவுள்ளது. இவ் வைகாசிப் பொங்கல் விழா விரத ஆரம்பம் நாளை 20-ம் திகதி என்றும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (52)

## பயிர்க் காப்புறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வாழை, தோடை, மா, எலுமிச்சை போன்ற பயிர்ச்செய்கைகளுக்கும் பயிர் காப்புறுதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் தற்போது நெல்லுக்கு மட்டுமே பயிர் காப்புறுதி உள்ளது குறிப்பிடத்தக்கது. (153)

## இராசி பலன்

19-05-1991

ஞாயிற்றுக்கிழமை

ஷட்டி முன்னிரவு 9-08 பூசம் பின்னிரவு 9-28வரை. சித்தயோகம்:

இராகு காலம் மாலை 4-22 முதல் 5-52 வரை.

சுபநேரம் காலை 8-52 முதல் 10-22 வரை.

மேடம்: நம்பிக்கையின்மை, கெட்ட சகவாசம், கருத்து வேற்றுமை.

இடபம்: வாழ்க்கைவசதி, தொழில் முன்னேற்றம், தெய்வவழிபாடு.

மிதுனம்: பயணங்கள் தாமதம், மனவேறுபாடு, அதிகாரிகள் தொல்லை.

கடகம்: பணவரவு, புதிய நம்பிக்கை, செல்வாக்கு

சிங்கம்: தொழில் மந்தம், குடும்பசுமை, மனச் சலிப்பு.

கன்னி: நண்பர்கள் சகாயம், கௌரவம், வேலைக் கடுமை

துலாம்: பித்தநோய், தொழில் நஷ்டம், குடும்ப துன்பம்.

விருச்சிகம்: அதிக அலைச்சல், உறவினர் சினம், சஞ்சலம்.

தனுசு: தொழிலாளர் ஒத்துழைப்பின்மை, சுகக்கேடு, திகைப்பு

மகரம்: ஒப்பந்தம், தொழில் ஆதாயம், தெய்வ நம்பிக்கை.

கும்பம்: புதிய மாற்றம், எதிர்பாராத நன்மை, குடும்ப சுகம்.

மீனம்: உடல்நல பாதிப்பு, வஞ்சம் தீர்த்தல், குடும்பத்தில் குழப்பம்.

-ஜோதிடர்

## யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

25-05-1991 அன்று இடம்பெறவிருந்த மேற்படி கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களால் 09-06-1991, காலை 8-30 மணிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தர விரும்புகின்றேன். வருட சந்தாப்பணம் கட்டாத அங்கத்தவர்கள் தமது சந்தாப் பணத்தையும், மதிய உணவு பெற விரும்பும் அங்கத்தவர்கள் அதற்குரிய கட்டணம் ரூபா 30/-தையும் 01-06-1991க்கு முன்னர் திரு. என். உலகநாதன், உப பொருளாளரிடம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அங்கத்தவர்களுக்கான தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பப்படவுள்ளது. இருந்தும், தற்போதுள்ள நிலைமையில் அழைப்பிதழ் கிடைக்கப்பெறாவிடினும் இவ்வறிவித்தலையும் அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(ஏ 1313)

## புங்குடுதீவு சவேரியார் நவநாட்கள் வழிபாடு

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத்தின் பங்குத்தந்தை, அருட் சகோதரிகளும் இடம்பெயர்ந்து சென்றுள்ளதினால் அவ்வாலயத்தின் வருடாந்த உற்சவமும் கொடியேற்றம் இல்லாமலும் இன்றி நவநாட்கள் அமைதியாக நடைபெற்றுவருகிறது.

தீவுப்பகுதிகளில் இருந்தும் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயராமல் புனித சவேரியார் ஆலய சுற்றுடலில் வாழ்ந்த பங்கு மக்களினால் கொடியேற்று வைபவம் இன்றி செபமாலை ஆராதனைகள், பஜனை, மன்றாட்டு போன்ற விசேட நிகழ்ச்சிகள் மூலமாக நவநாட்கள் சிறப்பாக நடத்தப்பட்டுவருகின்றன. [101]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## 6-ம் மாத நினைவஞ்சலி



சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்
(சிங்கம் தொழிலக பங்காளர்)
பாலாவோடை — காரைநகர்

தோற்றம்: 04 - 08 - 1958

மறைவு: 24 - 11 - 1990

திதி: 20 - 05 - 1991
(வைகாசித் திங்கள் வளர்பிறை ஸப்தமி திதி)

"செல்வரத்தினம்" என்கின்றபோது
ஐயோ...... பதறுகின்றோம்.
அடியேன் உன்னைப் பறிகொடுத்து
ஆறு மாதங்கள் உருண்டுவிட்டன......
கனவிலே உன் திருஉருவம்......
நினைவிலே உன் அழகுநடை
மன அலைகளிலே வீரப்பேச்சு......
எங்கு சென்றாயோ யாம் அறியோம்.
கொடியவர்கள் உனை அழைத்துச்சென்று
அடித்து நொருக்கி, அப்பாவிக்கு
இரையாக்கினரோ!
கூனிக்குறுகி வீரத்தை அடிபணிய வைத்து
பிழைத்திருக்கலாமே...... நெஞ்சமே
வெடித்துவிடும் போலிருக்கு
காலன் உன்னைக் கவர்ந்துவிட்டான்
தாயும் புலம்புகிறாள், மனைவியோ
துடித்துச் சாகிறாள்...... மக்களோ,
அப்பா அப்பா என்று கதறுவது
கேட்கவில்லையா! உற்றாரும்
உறவினரும் நண்பர்களும்
செல்வரத்தினத்தைக் கேட்பது
தெரியவில்லையா......
யாம் செய்த பயன் அதுதான்.
படைத்தவன் பறித்துவிட்டான்
ஓம் சாந்தி...... சாந்தி நாமம்
சாந்திபெற அனைவரும் பிரார்த்திப்போம்.

பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, மக்கள்,
சகோதரர், சுற்றம்.

"அன்னை இல்லம்",
தேவாலய வீதி, கல்வியங்காடு.

(ஏ-1312)

## மாபெரும் நாடகப் போட்டி

கொழும்புத்துறை மேற்கு சன சமூக நிலையத்தின் 20 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் நாடகப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும்பும் குழுக்கள் நாடகப் பிரதிகளுடன் 22-5-1991, புதன்கிழமைக்கு முன் நிலைய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். முதல் இரு இடங்களை பெறும் நாடகங்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும்.

கொ. மே. ச. ச. நிலைய
நிர்வாகத்தினர்

(B-2540)

# தமிழீழ மீட்பிற்காக வருடம்

# 75 கோடி செலவு செய்கிறோம்

- யோகி

(கிளிநொச்சி)

"தமிழீழப் போராட்டத்திற்கு வருடந்தோறும் எழுபத்து ஐந்து கோடி ரூபாவிற்கு மேல் செலவு செய்கிறோம். இதை உணராமல் இரண்டு பவுண் நகையைக் கொடுத்து தாம் தாராளமாக உதவி விட்டதாக எண்ணிச் சிலர் தேவையற்ற பேச்சுக்களில் ஈடுபடுகின்றார்கள்"

இவ்வாறு கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்டப் பிரசாரப் பொறுப்பாளர் பொ பிரசாந் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் செயலாளர் நாயகம் யோகி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

தமிழ் மக்களையும் தமிழீழத்தையும் காக்கும் புனிதப் போரில் நாம் ஈடுபட்டு வருகிறோம். இப்போரில் விடுதலைப் புலிகள் ஆயிரக் கணக்கில் வீரமரணமெய்தியுள்ளனர். பல ஆயிரம் புலிகள் காயமுற்றனர். பல நூற்றுக் கணக்கானவர்கள் ஊனமுற்றுள்ளனர். அப்படியிருந்தும் நாம் எமது போராட்டத்தைக் கைவிட்டு ஓடிவிடவில்லை. இன்றும் இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டு, அவர்களை நிலைதடுமாறச் செய்து விரட்டி அடித்து வருகிறோம்.

அரசாங்கத்தோடு நாம் பேச்சுவார்த்தை நடாத்துவதனால் தமிழீழத்தின் தேசிய கொடியான புலிக்கொடியை அனுராதபுரத்தில் ஏற்றுவதா அல்லது அதற்கு அப்பால் சென்று ஏற்றுவதா என்பதாகத்தான் அமையுமே தவிர சில சலுகைகளைப் பெறுவதற்காக பேச்சுவார்த்தை அமையமாட்டாது எனவும் தெரிவித்தார்.

மேலும், அவர் பேசுகையில் எத்தனையோ பெற்றோர்கள் தமது பிள்ளைகளை விடுதலைப் போருக்கு அர்ப்பணித்து விட்டு, ஆமையைப் போன்று அமைதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் விடுதலை உணர்வு தெருவில் நின்று போராட்டத்தைப் பற்றி கொச்சைப்படுத்திப் பேசுபவர்களுக்கு இருப்பதில்லை.

வீரம் என்பது தமிழ் இனத்தோடு கூடப்பிறந்தது சேர, சோழ, பாண்டியர் காலத்திலும் சரி பண்டாரவன்னியன், சங்கிலியன் காலத்திலும் சரி எம் மூதாதையர்கள் உயிருக்குப் பயந்து ஓடி மறையவில்லை. எதிரிகளை எதிர்த்து நின்றே போராடினார்கள்.

சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று மக்களை ஒன்று திரட்ட இவர்கள் தவறியதால் தான் இவர்களின் போராட்டம் தோல்வியில் முடிந்தது. எமது தலைவர் பிரபாகரன் இவற்றுக்கெல்லாம் அப்பால் சென்று சகலரையும் ஒன்றிணைத்து ஒரு கொடியின் கீழ் நின்று போராடிவருகிறார். அதனால்தான் அவர் போராட்டத்தில் வெற்றிய டைந்து கொண்டிருக்கிறார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு கரும்புலியும், வல்வெட்டித்துறையைச்சேர்ந்த ஒரு கரும்புலியும் இணைந்து பருத்தித்துறைக் கடலில்நின்ற கடற்படைக் கப்பலொன்றைத் தகர்த்துத் தாமும் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். இவ்வாறு மக்களை ஒன்றிணைந்த ஒரு தலைவனையும், அவனது படையை போன்ற ஒருசிறந்த கட்டுப்பாடுடையபடையையும் வேறுஎங்குமே காண முடியாது என்றார். (49)

## சங்கக் கிளையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் கடந்த வியாழன் இரவு கூரை பிரிக்கப்பட்டு உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

மேற்படி சங்கத்தின் உடுவில் வீதியில் அமைந்துள்ள கிளை இல 25லேயே மேற்படி திருட்டு நடைபெற்றுள்ளது. மேற்படி கடையின்கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர் அங்கிருந்த உணவுப் பொருள்களைத் திருடிக்கொண்டு கடைக் கதவை உடைத்து வெளியேறியுள்ளனர்

சங்கக்கிளைகள் பலவற்றில் இம்மாதம் திருட்டுக்கள் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச)


## தமிழீழ மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

# அக்கு பங்சர் சிகிச்சை!

மெடிசினா ஆல்ற்றனேற்றிவா அக்குபங்சர்சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் [களுபோவில] விரிவுரையாற்றிவரும், பிரபல அக்குபங்சர் வைத்திய நிபுணர் டாக்டர் ஜின்ஸ்லி ரகுநாதன் [D.AC, MD, (TM) F,F (HOM)] அவர்களினால், இல: 121/2 மானிப்பாய் வீதி, யாழ்நகர், இல: 95, யாழ் வீதி, மானிப்பாய், திருமதி, சத்தியமூர்த்தி, ஆடியபாதம் வீதி, கொக்குவில் போன்ற இடங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது, ஆஸ்த்மா, மூட்டுவாதம், பாரிசவாதம், நாரிப்பிடிப்பு, ஒற்றைத் தலையிடி, தோல் வியாதிகள், மனநோய், பாலியல் பிரச்சினைகள், போதை வஸ்து பாவனை மற்றும் நரம்பு தொடர்பான நோய்களுக்கும் மிகவும் வெற்றிகரமாகச் சிகிச்சை அளிக்கப்படும்.

நோயாளர் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

(R/1382)


## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுக்கப்பட்டுள்ளது

# பதவி வெற்றிடம்

1. பதவி: செயலாளர் - 114/08

சம்பளத்திட்டம்: 1005 – 40x5 – 50x10–1705

பிணைப்பணம்: ரொக்கப் பிணை ரூபா 5000 -

கல்வித் தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் அலுவலக உதவியாளர் / அங்கத்துவ உறவு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்காண் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமைகள்.

அல்லது

(இ) பட்டயம் பெற்ற செயலாளர்கள், நிர்வாகஸ்தர்கள் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் செயலாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஈ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர் தரம்) / க.பொ.த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் ஸ்தாபனமொன்றில் செயலாளர் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது எல்லை: 25 - 40 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவர்களின் விண்ணப்பங்கள் கூடிய கவனத்திற்கு எடுக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

பொதுமுகாமையாளர்
யாழ். ப. நோ. கூ. சங்கம்,
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 05 - 1991

பதில் பொது முகாமையாளர்
15 - 05 - 1991

(B-2534)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



### லெப்டினன்ட் வாசு
(துரைராஜா துருபதராஜ்)

வீரஜனனம் 09.03.1970 — வீரமரணம் 19.04.1991

திதி: 20.04.91

19.04 1991 அன்று மன்னார் பரப்புக்கடந்தானில் ஏற்பட்ட மோதலில் வீரமரணம்.

ஆண்டுபிர சாபதியின் சித்திரையைச் சார்பூர்வம்
சஷ்டிதிதி பஞ்சமியே வாசு எனப் - பூண்டபுகழ்
போராளியாகும் துருபதராஜ் வீரசொர்க்க
ஊராளப் போன தினம்

20.04.91 அன்று அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர் நண்பர்கள், போராளிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 20.05.91-ல் இவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பண்டித்தறை,
நெல்லியடி,
கரவெட்டி.

- குடும்பத்தினர்

(B-2542)

# முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்: 19 - 08 - 1962

வீரமரணம்: 19 - 04 - 1991

# வீரவேங்கை லெப்டினனட் கேணல்
# கிறேசி

## (கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை)

19-04-1991 அன்று மன்னார் பரப்புக் கடந்தானில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

தங்கத் தமிழீழம் மீட்டிட தம்முயிர் தரும்
வேங்கைகள் படையணி வெல்லும் - எங்கும்
மேவும் புகழ் சேர்க்கும் விடுதலை தேடும்
சாவும் இங்கு சரித்திரமாகும் !

லெப்டினனட் கேணல் கிறேசி மறைந்து நாள்
முப்பத்தொன்று முடிந்து போனது-முப்பது
வயதுப் பருவ இளைஞன் அவனுக்குத்
தாயக விடுதலையே தாகம் !

கிளிநொச்சி கிழக்கு

இராமநாதபுரம் விவசாய உற்பத்திக்குழு,
அம்பாள் நகர் விவசாய உற்பத்திக்குழு,
திருவையாறு விவசாய உற்பத்திக்குழு,
மாயவனூர் சிற்றூரவை,
விவசாய உற்பத்திக்குழு இணைப்பாளர்

(R-1399)

# ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம்

(உடுவில்)

சுயவிருப்பத்தின் அடிப்படையில் கடந்த டிசம்பர் மாதத்துடன் ஓய்வுபெற்ற யாழ் மாவட்டத்தை சேர்ந்த நாற்பத்தாறு ஆசிரியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் ஆசிரியர் நியமனத்தை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாண பிரதேசத்தில் உள்ள ஆறு கோட்டங்களுக்கும் இவ்வாசிரியர்கள் மீள நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மருதனார்மடம் கோட்டத்துக்கு 4 ஆசிரியர்களும், பண்டத்தரிப்பு கோட்டத்துக்கு 12 ஆசிரியர்களும் வேலணை கோட்டத்துக்கு 11 ஆசிரியர்களும், யாழ்ப்பாணம் கோட்டத்திற்கு 12 ஆசிரியர்களும், பருத்தித்துறை கோட்டத்துக்கு 3 ஆசிரியர்களும், சாவகச்சேரிக்கோட்டத்துக்கு 4 ஆசிரியர்களும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குரிய வேதனங்களை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒவ்வொரு கோட்ட பிரதான கல்வி அதிகாரிகளையும் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (109)

# ★ பதினொரு மாதங்களாக நிவாரணமின்றித் தவிக்கும் முல்லைத்தீவுமாவட்ட அகதிகள்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து அகதிகளாக வெளியேறிய ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு கடந்த 11 மாதங்களாக உலர்உணவு நிவாரணம் வழங்கப்படாததினால் தாம் சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக மேற்படி மக்கள் முல்லைத்தீவு அரச அதிபருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

400க்கு மேற்பட்ட மக்கள் கையெழுத்திட்டு அரச அதிபருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவ நடவடிக்கைகளால் நாம் எமது சொந்த இடங்களையும் உடைமைகளையும் விட்டு வெளியேறி அகதிகள் முகாம்களுக்கு வந்தோம். அங்கு ஏற்கெனவே அகதிகள் நிறைந்து வழிந்ததினால் முகாம்களிலும் இருக்க முடியாது. தனியார் வீடுகளிலும் வேறு சில இடங்களிலும் இருக்கின்றோம். சொந்தஇடங்களை விட்டு அகதிகளாக வெளியேறும் மக்கள் மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்லும்வரை உலர் உணவு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் கடமையாகும்.

கடந்த 11 மாதங்களாக எமக்கு நாலு தடவைகள் வழங்கப்பட்ட நிவாரணத்தை தவிர இதுவரை வேறு நிவாரணம் ஏதும் வழங்கப்படவில்லை: "மூன்றுநேர உணவு இல்லாவிட்டாலும் ஒருநேர உணவையாவது தாருங்கள்" என்று, எமது குழந்தைகள் எம்மைப் பார்த்துக் கேட்கும் இந்தப் பரிதாப நிலையை நாம் யாரிடம் கூறுவோம்.

எமது இந்தப் பரிதாப நிலையை நாம் பல தடவைகள் உங்களுக்கும் உங்கள் அதிகாரிகளுக்கும் எடுத்துக்கூறியும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை: தினமும் பட்டினிச்சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் எமது இந்த இறுதிக் கோரிக்கைக்கு தங்களிடமிருந்து இன்னும் ஒரு வாரத்துக்குள் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் அரசின் கவனத்தை ஈர்க்கக்கூடியதான ஒரு சாத்வீகப் போராட்டத்தை நடத்துவோம் என்பதை தங்களுக்கு இந்த மகஜர்மூலம் தெரியப்படுத்துகின்றோம். (வி)

# போதனாசிரியர்கள் தெரிவு நேர்முகப் பரீட்சைகள்

[உடுவில்]

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்குத் தொலைக்கல்வி மூலமான ஆசிரியர் கல்விப் பயிற்சிக்குத் தேவையான போதனாசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் கோட்டரீதியாக நடைபெறவுள்ளன.

நாளை 20ம் திகதி திங்கட்கிழமை முதல் இந்நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

இதுபற்றிய விபரங்கள் வருமாறு: நாளை 20-ம் திகதி - திங்கட்கிழமை - பருத்தித்துறை, சாவகச்சேரி, வேலணைக் கல்விக் கோட்டங்கள்:

21-ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம்.

23ம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணக்கோட்டம்

24ம் திகதி வெள்ளிக்கிழமை மருதனார்மடம் கல்விக் கோட்டம்.

நேர்முகப் பரீட்சைகள் காலை 9-00 மணிமுதல் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்படும்போதனாசிரியர்கள்யாழ்ப்பாண மாவட்டத்தில் எப்பகுதியிலும் கடமைபுரியத் தயாராக இருக்க வேண்டுமெனவும், வாரத்தில் 3 நாட்களுக்கு பயிற்சி ஆசிரியர்களுக்கு கற்றல்-கற்பித்தல் தொடர்பான வழிகாட்டலுக்கு போய்வரவும் தயாராக இருக்கவேண்டுமெனவும் யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (108)

# 7 மாதமாக சம்பளம் இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகத்தைச் சேர்ந்த சகல தரப்பு ஊழியர்களுக்கும் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் இன்று வரை எந்தவித சம்பளமும் கொடுக்கப்படவில்லை; யென்று கூறப்படுகிறது.

கடந்த 7 மாதசம்பளவிடயமாக கொழும்பு கடற்றொழில் அமைச்சுக்கு வானொலி செய்தி மூலம் தகவல் அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

# இராம சேவையாளர் அலுவலக நாட்கள்

(சித்தன்கேணி)

கிராமசேவை அலுவலர்களின் அலுவலக தினங்களாக திங்கள், வியாழன் ஆகிய இரண்டு தினங்களும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று உள்நாட்டு அலுவலகள் விடயச் செயலாளர் எம். என். ஜுனைட்டினால் சகல மாகாணசபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும், ஆளுநர்களின் செயலாளர்களுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும், பிரதேச உதவி அரசாங்க அதிபர்களுக்கும், கிராம சேவை அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது திங்கள், வெள்ளி ஆகிய இரண்டு தினங்களும் கிராம சேவை அலுவலர்களின் அலுவலக தினங்களாக இருப்பது இங்குகுறிப்பிடத்தக்கது. (137)

# ★ கூட்டுறவு ஊழியர்கள் கொலை நீதி விசாரணை நடத்துமாறு தொழிற்சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை நிலாப்பனை இராணுவ முகாமில், நிலாப்பனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நான்கு ஊழியர்கள் சுட்டுக் கொலைப்பட்டது தொடர்பாக, நீதி விசாரணை நடத்துமாறு யாழ். கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் பாதுகாப்பு அமைச்சைக் கோரியுள்ளது.

இக்கோரிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

"சாதாரண பொதுமக்களாகிய இராமச்சந்திரன், நடராத்தினம் (சங்குவேலி), குமார் (பள்ளையடிச்சேனை), மாணிக்கராசா (பள்ளிக்குடியிருப்பு) ஆகிய இக்கூட்டுறவுச் சங்க ஊழியர்களைச் சுட்டுக் கொன்றமைக்கு எமது வன்மையான ஆட்சேபனையைத் தெரிவிக்கின்றோம். இதுபற்றி நீதி விசாரணை நடத்துங்கள்." (152)

பனைவெல்ல

# விற்பனை அதிகரிப்பு

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தயாரிக்கப்படும் பனைவெல்லம் கூடுதலாக விற்பனையாகி வருவதாக கூட்டுறவு பகுதி தெங்கு-பனை உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச்சங்க முகாமையாளர் திரு. த. செல்வராசா தெரிவித்தார்.

பனம் கருப்பநீரில் இருந்து தயாரிக்கப்படும் ஒரு கிலோ வெல்லம் சில்லறை விலைக்கு 66 ரூபாவாகவும் மொத்த விலைக்கு 62 ரூபாவாகவும் சங்கம் வழங்கி வருவதாகவும் பனைவெல்லம் தயாரிப்பதற்கு தினமும் இரண்டாயிரத்துக்கும் கூடுதலான போத்தல் கருப்பநீரைப் பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (109)

# தேர்தல் வன்முறை குறித்து கமிஷன் கவலை

[புதுடில்லி]

உத்தரப்பிரதேசம், பீஹார் மேற்கு வங்காளம் ஆகியமாநிலங்களிலுள்ள 10 தொகுதிகளில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு தேர்தலுக்கு முன்னரேயே வன்செயல்கள் நிகழ்ந்துள்ளது குறித்து தேர்தல் கமிஷன் கவலை தெரிவித்துள்ளது.

இத்தொகுதிகளில் வாக்களிப்பைத் தள்ளிப்போடுவது குறித்து தேர்தல் கமிஷன் நிலைமையைமேலும் ஆராய்ந்து வருகிறது.

கொலைகள், ஆயுதச்சண்டைகள், குண்டுவீச்சு மற்றும்வாக்களிப்பு நிலையங்களை கைப்பற்றும் போன்ற செயல்களுக்கு திட்டமிடப்பட்டு வருதாகவும் இதுபற்றி அந்தந்த மாநில ஆளுநர்கள் தகுந்த முன்னேற்பாடு நடவடிக்கை எடுக்கும் படியும் தேர்தல் கமிஷனர் தெரிவித்துள்ளார்: (பூ)

# கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் ஆயிரம் பேர் பாதிப்பு

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் ஆயிரக்கணக்கானோர் தாம் பாதிப்படைந்துள்ளதாக புகார் தெரிவிக்கின்றனர்.

வங்கிகளில் ஓய்வூதியம்பெறுவோருக்கு மார்ச், ஏப்பிறல் ஆகிய இரண்டு மாதங்களும் பணமாக ஒய்வூதியம் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால்கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுவோருக்கு இதுவரை மார்ச் மாதத்துக்குரிய ஒய்வூதியம் கூட வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (137)

# இடம்பெயர்ந்தோர்களுக்கு சுகாதார வசதிகள்

(உடுவில்)

வலிகாமம் வடக்கிலிருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து வந்து உடுவில், இணுவில், தாவடிப் பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அடிப்படைச் சுகாதார வசதிகளை அமைத்துக் கொடுப்பதில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிகள் அதிக அக்கறை காட்டிவருகின்றனர்.

வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் சுமார் 60 வீதமான மக்கள், இப்பகுதிகளில் வசிக்கின்றனர். இவர்களுக்கு விசேடமாகத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினரால் 28 முகாம்கள் அமைக்கப்பட்டு, 1 328 குடும்பங்களைக் கொண்ட 5,887 மக்களுக்குச் சுகாதார வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன; (109)

# தேர்தல் ஊழியர்களுக்கு காப்புறுதி நிதியம்

[புதுடில்லி]

தேர்தலில் வாக்குப் பதிவுக் கடமைகளில் ஈடுபடும் ஊழியர்களின் பாதுகாப்பு நலன் கருதி தேர்தல் கமிஷன் காப்புறுதி நிதியம் ஒன்றை எடுத்துள்ளது.

இதனால் தேர்தல் பணியில் ஈடுபடும் 40 லட்சம் ஊழியர்கள் பயனடையவுள்ளனர்.

தேர்தல் பணியில் ஈடுபடும் ஊழியர்கள் வன்செயல் எதனாலும் ஊனமுற்றால் அவர்களுக்கு ஒருலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படும்; [பூ]

# தமிழகத் தேர்தல்: இலங்கைத் தமிழ் அகதி முகாம்களில்பொலிஸ்காவல்

[சென்னை]

தமிழக தேர்தலைமுன்னிட்டு தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள அனைத்து முகாம்களிலும் பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளன.

மேலும் 25ம் 26ம்திகதிகளில் அகதிகள் முகாம்களைவிட்டு வெளியேறவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத் தேர்தலில் இலங்கைத் தமிழர்களின் தலையீட்டைத் தவிர்க்கும் முகமாகவே இவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்; (சி)

# வலிகாமம் தெற்கில் சைக்கிள் இலக்கத் தகடு வழங்க ஏற்பாடு

(உடுவில்)

1991ம் ஆண்டுக்கான சைக்கிள் இலக்கத் தகடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இலக்கத் தகடுகளைப் பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கு அவ்வப் பாடசாலைகளிலேயே வைத்து வழங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன;

உடுவில் உப அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள், உடுவில் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு, ஒரு தினத்தை நிர்ணயித்து, இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ள வசதி செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது; (109

# தி.மு.க. - அ.தி.மு.க. மோதல் ஒருவர் பலி; பலர் காயம்

(சென்னை)

தி. மு. க. — அ. தி. மு. க. கட்சி ஆதரவாளர்களுக்கிடையே நேற்று ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் படுகாயமடைந்தனர்.

தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது சுவரொட்டிகள் ஒட்டுவதில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இம் மோதல் ஏற்பட்டு பின் கொலையில் முடிவடைந்ததாம்.

இச்சம்பவம் தொடர்பாக 7 பேர் உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்திய பொதுத் தேர்தலில் யானைகள், மாட்டு வண்டில்கள், ஒட்டகங்கள், ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

பின்தங்கிய பிரதேசங்களிலிருந்து வாக்குப்பெட்டிகளை வாக்குசாவடிக்கு எடுத்துவருவதற்கும், வாக்கு சாவடிகளிலிருந்து வாக்குப்பெட்டிகளை கொண்டுசெல்வதற்கும் இவை பயன்படுத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷன் நேற்று தெரிவித்தார்.

இதற்கிடையில் திரு ராஜீவ் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் வேட்பாளர் ஒருவரின் சகோதரர் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்துள்ளன. பீகாரில் வலதுசாரி வேட்பாளர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். (அ)

## ஒருமாதமாக காணவில்லை

(ஊர்காவற்றுறை)

அல்லைப்பிட்டி 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. தர்மலிங்கம் கனகலிங்கம் (வயது 45) இன்னும் வீடு திரும்பவில்லை.

இவருடைய மனைவியும் ஏழு பிள்ளைகளும் தற்சமயம் இடம் பெயர்ந்துவந்து கொட்டடியில் வசித்துவருகின்றனர். கடந்த மாதம் 15ம் திகதியிலிருந்து இவரைக்காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (59)

## 23ம் திகதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதியும் விடுமுறையாகையால் இவை தவிர்ந்த நாட்களில் பரீட்சைகள் நடைபெறும்.

இதுபற்றிய மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் பரீட்சை மேற்பார்வை உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

இதன் ஒரு கட்டமாக இலங்கைக் கடற்படைக்கென சீனாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களை இயக்கும் இயந்திர சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இதற்கான பேச்சுக்கள் நடாத்தப்பட்டு இவை துரிதகதியில் தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

50 தொன் பொருட்களை ஏற்றி இறக்கக்கூடிய இச்சாதனம் ஆழமற்ற கடலிலும் செயற்படக்கூடியது. நவீன உபகரணங்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளது.

சீன அதிகாரிகள் அண்மையில் இதனை கொழும்பில் வைத்து கடற்படைத் தளபதியிடம் கையளித்தனர். (சி)

## தமிழீழத்திற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் போராடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகளையே தாம் ஆதரிப்பதாகவும் தொடர்ந்தும் அவர்களையே ஆதரிக்கப்போவதாகவும் தமிழகத்தில் ஆட்சிமுறை தங்கள் கட்சி பெரும்மாற்றத்தினை ஏற்படுத்தும் என்றும் கூறினார். (சி)

## கொழும்பு செல்லும் நோயாளர்களின் அளவு கட்டுப்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

அவசர சிகிச்சைக்காக கொழும்புக்கு கப்பலில் கொண்டுசெல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வலியுறுத்தலின் பேரிலேயே இக்கட்டுப்பாட்டைத் தாம் நடைமுறைப்படுத்த இருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

40 நோயாளிகளுக்கு பதிலாக இனிமேல் 25 நோயாளிகளை மட்டுமே கப்பலில் அனுப்பும்படி சர்வதேச செஞ்சிலுவை சங்கம் பணித்துள்ளதாம்.

அதிக நோயாளிகளை கப்பலில் கொண்டுசெல்வதினால் கப்பலில் இருக்கும் வைத்தியர்களால் அவர்களை தக்க முறையில் பராமரிக்க முடியாதிருப்பதே இதற்கு முக்கிய காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (வி)

## கொழும்பு பயணிகள்

(யாழ்ப்பாணம்)

பயணிகள் நீண்டநாளைக்குப் பின்பு தென் இலங்கை நோக்கிப் பயணத்தை மேற்கொள்வதற்காக நேற்றுக்காலை நல்லூர் முத்திரைச் சந்தையில் கியூவில் நின்று ஆசனம் பதிவு செய்தார்கள். (152)

## வேலணையில் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்கள் தமது கொத்தணியைச் சேர்ந்த ஆசிரியர்களின் மே மாதத்திற்குரிய சம்பளக் கொடுப்பனவுக்குரிய சம்பளப் பத்திரத்தையும், காசோலையையும் 20ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வேலணைக் கோட்டத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வேலணைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. புலேந்திரன் கோரியுள்ளார்.

## ஜூலை 6-ம் திகதி யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஜூலை மாதம் 6ம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவிருக்கிறது.

700 பட்டதாரிகள் மேற்படி பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறவிருக்கிறார்கள். பட்டமளிப்புக்கு வழங்கப்படும் பதக்கங்கள் இம்முறை எவர் சில்வர் உலோகத்தால் பெரிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

கலைப்பீடம், விஞ்ஞான பீடம், மருத்துவபீடம் ஆகிய 3 துறைகளுக்கும் ஒரேநாளில் 3 தொகுதிகளாக பட்டமளிப்பு நடைபெறவிருக்கிறது. (153)

## யாழ். ஆஸ்பத்திரியில் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று வெளிநோயாளர் பிரிவில் தந்தை ஒருவர் தனது $1\frac{1}{2}$ வயதுக் குழந்தையை குழந்தைகள் சிகிச்சைநிலையத்தில் காட்டிவிட்டு அவ்வழியால் திரும்புகையில் அக்குழந்தையின் $1\frac{1}{2}$ பவுண் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அங்கு வந்தவர்களை ஓ. பி. டி. வாசலில் வெளியேறவிடாமல் தடுத்து நிறுத்தி செ. ச. தொண்டர்களும், காவலாளிகளும் தீவிர சோதனைசெய்தும் சங்கிலியினை மீட்கமுடியாமல் போய்விட்டது. (56)

## பௌத்த பிக்குகள் காரைநகர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், நயினாதீவு, பலாலி படை முகாம்களுக்கு நேற்று பல பௌத்த பிக்குகள் விஜயம் செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிக்குகள் இப்பகுதியிலுள்ள விகாரைகளில் பகல்நேரம் பூசைகளை நடாத்தியுள்ளனர்.

இதேவேளை காரைநகர், நயினாதீவில் பல இடங்களுக்கும் இவர்கள் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence number B/168306/81.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் துணைப்படையில் பயிற்சி பெற்றோருக்கும், விடுதலைப் புலிகளின் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிந்தோர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை 20-ம் திகதி திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வலிகாமம் பிரிவிலுள்ள துணைப்படையினரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்தோரும் (ஆண்கள்) தவறாது சமூகம் தரும்படி தமிழீழ விடுதலைப்புலிகள் கேட்டுள்ளார்கள்.

## புலிகள் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் காலைபோட்ட மடு பகுதியை சுற்றிவளைத்த படையினர் மீது புலிகள் பொறிவெடி, கிளைமர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

உன்னிச்சை, வவுணதீவு முகாம்களிலிருந்து வெளியேறிய படையினர் இப்பகுதியை சுற்றிவளைத்தபோதே புலிகள் இத்தாக்குதலை நடத்தினர். இதில் படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் பற்றி எதுவும் தெரியவில்லை. (அ)

## இனப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளவு விரைவில் தருமாறு அரசாங்கம் கேட்டுள்ளனர்.

இவ்வறிக்கை கிடைத்தபின் இதன் ஒவ்வொரு அம்சமும் ஆராயப்பட்டு அரசு ஓர் பொதுக்கருத்துக்குவரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சர்வகட்சியில் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## 20 பாடசாலைகளில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிடங்கள் 100 தனியார் வீடுகள் என்பவற்றை பலவந்தமாக இராணுவம் பறித்துத் தங்கள் வசதிக்குப் பயன்படுத்துகின்றது.

மேற்படி கட்டிடங்களைத் திருப்பித் தருமாறு பொதுமக்களும், மத ஸ்தாபனங்களும் பலதடவை ஜனாதிபதியோடு தொடர்பு கொண்டும் இதுவரை இவை திருப்பி வழங்கப்படவில்லை. (153)

## ராஜீவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளதாம்.

கடந்த இரு தினங்களுக்கு முன் பம்பாயில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்ற புறப்படுகையில் திரு. ராஜீவ் காந்திக்கு தொலைபேசி மூலம் இம் மிரட்டல் விடுக்கப்பட்டதாம்.

அதேதினம் உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. வி. பி. சிங் கலந்து கொள்வதைத் தடுக்கும் நோக்கில் மேடையின்கீழ் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சிங் கொல்லப்படுவாரெனவும் மூன்று நான்கு தடவைகள் கட்சி தலைமையகத்திற்கு தொலைபேசி மிரட்டல் வந்ததாம்.

இதேவேளை தமிழகத்தில் செல்வி ஜெயலலிதா போட்டியிடும் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தாம் தேர்தல் தினத்திற்கு முதல்நாள் தற்கொலை செய்யப்போவதாக விடுத்த எச்சரிக்கையை அடுத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

## 12 தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர். 7 வீடுகளையும் தீக்கிரையாக்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளையடிமடுவைச் சேர்ந்த க. யோகராசா என்பவர் கைது செய்யப்பட்டு பின் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறையில்நேற்று சாகமப் பகுதியில் 9 தமிழர்கள் கைது செய்யப்பட்டு அதில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். 7 பேருக்கு என்ன நடந்தது என்பதுபற்றி எதுவும் தெரியவில்லை. (அ)

## தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து கடந்த 15-ம் திகதி ரோந்துவந்த இராணுவத்தினர் கொடுவாமடு சந்தியிலுள்ள கடை ஒன்றினுள் புகுந்து பொருட்களை அள்ளிவிட்டு கடையும் வெளியில் போட்டு எரித்துள்ளனர். (அ)

## விபரம் சேகரிப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் இராணுவ நடவடிக்கை காரணமாக காணாமற்போனவர்கள் பற்றிய பூரண விபரங்கள் மாவட்ட சமாதான குழுவால் திரட்டப்பட்டுள்ளது.

மாவட்ட சமாதானக்குழு காணாமற்போனவரின் பெயர், விலாசம், காணாமற்போன திகதி ஆகியவற்றுடன் கைது செய்யப்பட்ட திகதி கொண்டு செல்லப்பட்ட முகாம் ஆகியவற்றை விபரமாகத் திரட்டியுள்ளது. இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு அறிவித்து எந்தவித பதிலும் இதுவரைகிடைக்கவில்லையென்று மாவட்ட சமாதானக்குழு தெரிவிக்கிறது. (153)

## புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் விசாரணை நடைபெற்றது.

இந்த அதிகாரி கடமையாற்ற மறுத்த காரணங்களை இராணுவ நீதிமன்றம் ஏற்க மறுத்ததையடுத்தே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (சி)

## கண்ணி வெடியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர்.

இதேவேளையில் இம்மாவட்டத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் 3 பொதுமக்கள் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் அம்பாறை சாகம பகுதியில் கண்ணி வெடியில் சிக்கிக் கவசவாகனமொன்று பலத்த சேதத்துக்குள்ளானது. (அ)

## ஆதரவுக் கரங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த திரு. நா. செல்வம் நேற்றுமுன்தினம் முல்லையடியில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: "சிங்களப் பேரினவாதம் தன்முழுப்பலத்தையும் கொண்டு விடுதலைப் புலிகளை அழிக்க எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்விகண்டு போனதுமட்டுமல்ல அதிவேகமாக விடுதலைப் புலிகள் வளர்ந்து வருகிறார்கள். இது எப்படி சாத்தியமானது என்று சிங்களப் பேரினவாதம் ஓர் ஆய்வையே நடாத்தியது. இதில் ஓர் உண்மையை அவர்கள் அறிந்துகொண்டனர். விடுதலைப் புலிகள் எங்கிருந்து வருகிறார்கள்? மக்கள் என்ற விளைநிலத்தில் இருந்துதான் விடுதலைப் புலிகள் விளைகின்றார்கள். ஆகவே அந்த விளைநிலத்தை அழித்துவிட எதிரி தீர்மானித்து விட்டான்.

"எமது வெற்றியைவிழுங்கிவிட எதிரி தன்னை மேலும் பலப்படுத்திக்கொண்டு இருக்கின்றான். இந்நிலையில் எமது பலத்தை நாம் மேலும் பெருக்கவேண்டியுள்ளது. ஆகவே இதுவரை ஆதரவு தந்து எம்மை வளர்த்த மக்கள் இனி ஆயுதம் ஏந்தவேண்டிய காலம் வந்துவிட்டது. சிங்களப் பேரினவாத பூதம் விரித்துள்ள மரணதண்டனையிலிருந்து தம்மையும் எம்மக்களையும் விடுவிக்கவேண்டிய ஒரு வரலாற்றுக் கடமை இன்றைய இளம் சந்ததியினருக்கு உண்டு. எனவே அனைவரும் ஒன்றிணைந்து ஆயுதம் ஏந்தி எம்மினத்தையும் மண்ணையும் பாதுகாக்கப் போராடுவோம்." (அ)